<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 178/2024</u>

<u>வழக்கு சாட்சி PW-9</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம்பிள்ளை | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும். அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.7** ஆகும். பூலான்குடியிருப்பு சமுதாய மண்டபம் அருகே ஒரு சண்டை நடந்ததாக போலீசார் அங்கு வந்திருந்தார்கள். அப்போது ரோட்டில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு தேதி, மாதம் ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

மண்டபத்திற்கு அருகே திருமலை வீடு உள்ளது. அதற்கு எதிரே சேனைத்தலைவர் மண்டபம் உள்ளது என்றால் சரிதான். மண்டபத்திற்கு அருகே சந்திரன் வீடு உள்ளது. சந்திரன் வீட்டிற்கு மேற்கு பக்கம் யார் வீடு

உள்ளது என்றால் ஐயப்பன் வீடு உள்ளது. ஐயப்பன் வீட்டிற்கு எதிரே யார் வீடு உள்ளது என்றால் முருகேசன் வீடு உள்ளது. போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர், அன்றைய தினம் சம்பவயிடத்தில் வைத்து தேங்காய் திருவி, துணி, துண்டு, உலக்கை, ஆகியவற்றை போலீசார் அத்தாட்சி கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், முத்துக்குமார் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.16 10:40:13 +0530